

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 17.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் மனைவி திருமதி சவுதா மற்றும் குடும்பத்தினர் சந்தித்து, அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் பிறந்த நாளான ஜூன் 15–ஆம் நாளினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷா நவாஸ் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 17.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் மகள் வஹிதா, மருமகன் அயாஸ் பாஷா ஆகியோர் சந்தித்து, கவிக்கோ அப்துல் ரகுமான் பிறந்த நாளான நவம்பர் 9–ஆம் நாளினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷா நவாஸ் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 17.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அனைத்து மத்ரஸாக்களின் கூட்டமைப்பின் தலைவர் மௌலவி எம்.அப்துல் ஹமீது பாகவி, செயலாளர் மௌலவி பி.எம். முஹம்மது அலி அன்வாரி, பொருளாளர் மௌலவி பி.ஷகீல் அஹமது ரஷாதி, நிர்வாகிகள் மௌலவி முனைவர் எம்.சதீதுத்தீன் பாக்கவி, மௌலவி ரூஹுல் ஹக் ஹஜ்ரத் ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசின் வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம்.முஹம்மது அபூபக்கர், திண்டுக்கல் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஆர்.முகமது இலியாஸ் ஆகியோர் உள்ளனர்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு:

# ஜனநாயக விரோத சக்திகளை நிலைகுலைய வைத்துள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப்.20–

**எந்தத் தனிநபரும் அது எத்தகைய உயர் பொறுப்பில் இருப்பவரானாலும் அவர் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும். இதைத்தான் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. இத்தீர்ப்பானது ஜனநாயக விரோத சக்திகளை நிலைகுலைய வைத்துள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

அரசியலமைப்புச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு 75 ஆண்டுகள் கடந்துவிட்டன.

எதிர்க்கட்சி ஆளும் மாநில அரசுகளைச் சிதைத்து, பொதுக் கருத்தாடலில் வலதுசாரிக் கருத்துகளைத் திணிக்க முற்படும் தற்போதைய தீங்கானது ஆளுநர்கள், குடியரசுத் துணைத் தலைவர், அவ்வளவு ஏன் குடியரசுத் தலைவர் உட்பட அரசியலமைப்புப் பதவிகளை அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதில் இருந்து முளைத்த ஒன்றாகும்.

மக்களாட்சியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் அரசை நடத்த வேண்டும், அலங்கார நியமனப் பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் அல்ல! எந்தத் தனிநபரும், அது எத்தகைய உயர்பொறுப்பில் இருப்பவரானாலும் அவர் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும். இதைத்தான் மாண்பமை உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க அத்தீர்ப்பு தவறான வழிமுறையைச் சரிசெய்யும் நகர்வாகும்.

ஆகவே, இந்த வரவேற்கத்தகுந்த சீர்திருத்த நடவடிக்கை பல ஜனநாயக விரோத சக்திகளை நிலைகுலைய வைத்துள்ளதைப் புரிந்து கொள்ள முடிகிறது. தற்போதைய தேவை என்பது, இந்தச் சீர்திருத்தம் முழுமையாக நடைமுறைபடுத்தப்படுவதை உறுதி செய்வதே.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.


